தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI

RNI-TNTAM/2023/88253


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 122 | 4 Pages | 30.11.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 122 | 4 பக்கங்கள் | 30.11.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**

**விளக்கம்:**
**நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கிஉணரும்புல்லறிவுஉடையவராகஇருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.**

## கனடாவில் இரவு நேரங்களில் வானில் தோன்றும் 'ஒளி தூண்கள்'



ஒட்டாவா, நவ.30

கனடாவின் அல்பெர்ட்டா நகரில் இரவு நேரங்களில் வானத்தில் 'ஒளி தூண்கள்' என அழைக்கப்படும் வெளிச்சம் தோன்றுகிறது. காண்போரை பிரமிக்க வைக்கும் இந்த வெளிச்ச தூண்களின் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன. இதை பார்த்த பலரும், இது வேற்றுகிரக வாசிகளின் செயல் என கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

ஆனால் கனடாவில் இது போன்ற 'ஒளி தூண்கள்' பெரும்பாலும் குளிர் காலங்களில்அதிகமாககாணப்படுகின்றன. இது இயற்கையாகஉருவாகும் ஒரு ஒளியியல் மாயை(Optical Illusion) என்று அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வளிமண்டலத்தில் 0.02 மில்லி மீட்டர் அளவு கொண்ட அறுகோண வடிவிலான பனி படிகங்கள் மீது ஒளி பட்டு சிதறும்போது இது போன்ற 'ஒளி தூண்கள்' தோன்றுவதாக கூறப்படுகிறது.

பெரும்பாலும் தெரு விளக்குகள், டிராபிக் விளக்குகள் போன்றவற்றில் இருந்து வரும் வெளிச்சம் வளிமண்டலத்தில் பரவும்போது இந்த 'ஒளி தூண்கள்' தோன்றுகின்றன. இந்த ஒளி தூண்களை கனடா மட்டுமின்றி ரஷியா மற்றும் ஸ்காண்டினேவியாவின் ஒரு சில பகுதிகளிலும் குளிர் காலத்தில் இரவு நேரங்களில் காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## டிரம்புடன் மெட்டா நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் சந்திப்பு



வாஷிங்டன், நவ.30

அமெரிக்காவில் கடந்த 5 ஆம் தேதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டடொனால்டுடிரம்ப் வெற்றி பெற்றார். வரும் ஜனவரி மாதம்அமெரிக்கஅதிபராகடிரம்ப் பதவியேற்க உள்ளார். அதிபராக தேர்வு ஆகியிருக்கும் டிரம்ப் தற்போது, தனது அமைச்சரவையில் இடம்பெறுபவர்களை அறிவித்து வருகிறார். அதேபோல, அமெரிக்க தொழில் அதிபர்களையும் சந்தித்து வருகிறார்.

அந்தவகையில்,மெட்டாநிறுவனரும்தலைமைநிர்வாகஅதிகாரியுமான மார்க் ஜுக்கர்பெர்க் சந்தித்து பேசினார். இதுகுறித்து ஜனாதிபதியின் ஆலோசகர் ஸ்டீபன் மில்லர் கூறுகையில், மார்க் ஜுக்கர்பெர்க் டிரம்பின் பொருளாதார திட்டங்களை ஆதரிக்க விரும்புகிறார். எனவே தனது உறவை புதுப்பிக்கும் வகையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது என கூறினார்.முன்னதாகடெஸ்லாநிறுவனர்எலான்மஸ்கும்மார்ஏலாகோவில் டிரம்பை சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் நிலச்சரிவு: பலி எண்ணிக்கை 27 ஆக உயர்வு



ஜகார்த்தா, நவ.30

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வடக்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள மேடான் நகரத்திலிருந்து பெரஸ்டாகி நகருக்கு செல்லும் சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சுற்றுலா பஸ் மீது மரங்கள், மண் மற்றும் பாறைகள் மூடப்பட்டன. இதில் பஸ்சில் இருந்த டிரைவர் உள்பட 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதையடுத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப்படையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு மேடான் நகரில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது என்று மீட்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நிலச்சரிவில் குறைந்தது 16 பேர் காயமடைந்துள்ளனர். கனமழையால் பல இடங்களில் திடீர் வெள்ளப்பெருக்கால் வீடுகள் மற்றும் விளை நிலங்கள் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. வடக்கு சுமத்ரா பிராந்திய காவல்துறையின் போக்குவரத்து இயக்குனர் முஜி எடியன்டோ கூறுகையில், இந்தோனேசியாவின் சாலையில் நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களுக்கு இடையில் சில வாகனங்களில் மக்கள் சிக்கியிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்ற குறைந்தது 2 நாட்கள் ஆகும் என்றார். இந்த வார தொடக்கத்தில், வடக்கு சுமத்ரா மாகாணத்தின் மலைப்பகுதிகளில் நான்கு இடங்களில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் 20 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேமரூனில் படகு கவிழ்ந்ததில் 20 பேர் பலி

யாவுண்டே, நவ.30

மத்திய ஆப்பிரிக்க நாடான கேமரூனின் லோகோநெட்சாரி பகுதியில் உள்ள டாராக் தீவில் இருந்து பயணிகளை ஏற்றி சென்ற படகு கவிழ்ந்தது, இந்த விபத்தில் 20 பேர் நீரில் மூழ்கி பலியான நிலையில் மேலும் பலர் நீரில் மூழ்கியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப்படையினர் நீரில் மூழ்கியவர்களை தேடி வருவதால், பலிஎண்ணிக்கைஅதிகரிக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.இந்தவிபத்துக்கான காரணத்தை கண்டறிய முறையான விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். அதிக சுமை, தவறான செயல்பாடுகள் மற்றும் கடுமையான வானிலை ஆகியவற்றால் அடிக்கடி படகு விபத்துகள் இப்பகுதியில் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி: முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, நவ.30

தருமபுரி மாவட்டம், பென்னாகரம், அலகட்டு கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்குரூ.3லட்சம்நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அலகட்டு மலை கிராமத்தைச்சேர்ந்த ருத்ரப்பாசிவலிங்கி தம்பதியரின் மகள் கஸ்தூரி (வயது 14) என்பவர் நேற்று (28.11.2024) பிற்பகல் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கீரை பறித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விஷப்பாம்பு கடித்ததில், உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்குகொண்டுசெல்லும்வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மழைக்கு பின் பயிர் பாதிப்புகள் குறித்து கணக்கெடுக்கப்படும்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு

சென்னை, நவ.30

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது;

"வடகிழக்கு பருவமழை இயல்பாக அக்டோபர் 1 முதல் துவங்கும். ஆனால், இவ்வாண்டு 16.10.2024 அன்று துவங்கி பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் டெல்டா மாவட்டங்களில்குறைந்தபட்சமாக கடலூர் மாவட்டத்தில் 57 மி.மீ மழையும், அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 148 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது.

இதனால் சுமார் 31,853 ஏக்கர் பரப்பில்சம்பாநெல்சாகுபடி செய்யப்பட்ட வயல்களில் நீர் சூழ்ந்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 18,972 ஏக்கர் பரப்பிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 8,151 ஏக்கர் பரப்பிலும், திருவாரூர் மாவட்டத்தில் 2,391 ஏக்கர் பரப்பிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,339 ஏக்கர் பரப்பிலும் நீர் சூழ்ந்துள்ளது.



வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை / தோட்டக்கலை அலுவலர்கள் 1963 நபர்கள் மற்றும் உதவி வேளாண்மை / தோட்டக்கலை அலுவலர்கள் 3945 நபர்கள் ஆக மொத்தம் 5908 நபர்கள் களப்பணியில் உள்ளனர். அவர்கள் விவசாயிகளுக்கு நீரினை வடிப்பது தொடர்பாகவும் அதன் பின் எடுக்க வேண்டிய ஆலோசனைகளையும் கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறார்கள்.

1. விளை நிலங்களில் உள்ள சிறு சிறு பாசன மற்றும் வடிநீர் வாய்க்கால்களில் உள்ள, செடி கொடிகளை அகற்றிட வேண்டும்.

2. வடகிழக்கு பருவமழையின் போது வெள்ள மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உள்ள அதிகப்படியான நீரை வெளியேற்றிட வேண்டும்.

3. வெள்ள மழைக்காலங்களில் உரம் இடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களைக்கொல்லி இடுதல் போன்றவற்றை தவிர்த்திட வேண்டும். 4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நீர் வடிந்தவுடன்மேலுரமாக22கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் ஆகியவற்றுடன் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு இரவு வைத்திருந்து 17 கிலோ பொட்டாஷ் உரத்துடன் கலந்து இட வேண்டும். 5. தழைச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு (மஞ்சள் நோய் ) காணப்பட்டால் 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ ஜிங்க் சல்பேட் கலந்து 200 லிட்டர் நீருடன் கைத்தெளிப்பான் கொண்டு இலைவழியூட்டமாக தெளிக்க வேண்டும்.

மேலும், இப்பருவத்திற்கு அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான யூரியா 1,82,063 மெ.டன், டிஏபி 39,558 மெ.டன், பொட்டாஷ் 46,268 மெ. டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 1,18,106 மெ.டன் இரசாயனஉரங்கள்தனியார்கடைகளிலும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும்பயிர்பாதிப்புநிலவரங்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் கண்காணித்து வருவாய் துறையுடன் இணைந்து 33 சதவீதத்திற்குமேல்பயிர்பாதிப்பை கணக்கீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு செல்வாக்கு இல்லை ஆர்.பி.உதயகுமார் விமர்சனம்



சென்னை, நவ.30

தமிழ்நாட்டில் கூட்டணி கட்சிகளின் தயவில்தான் தி.மு.க. நின்று கொண்டிருப்பதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது;

"பொய்க்கால் நடனம் என்ற தமிழ் பாரம்பரிய கலாசார நடனம் ஒன்று உள்ளது. அந்த நடனத்தை ஆடுபவர் மிக உயரமாக இருப்பார். அவரை பார்த்து எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அவரது உயரத்திற்கு கட்டை கால் தான்காரணம்என்பதுபின்னர்தான் தெரியும்.

அதேபோல் தன் சொந்த காலில் நிற்கும் தகுதியை இழந்துவிட்ட தி.மு.க., பொய்க்கால் நடனம் போல் தமிழ்நாட்டில் கூட்டணி கட்சிகளின் தயவில் தான் நின்று கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு செல்வாக்கு இல்லை."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பல்வேறு மசோதாக்களை உடனே நிறைவேற்ற உறுதி

தமிழ்நாடு இளம் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பாக மத்திய சட்டத்துறை அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன் ராம் மேக்வாலா புது டெல்லியில் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து மத்திய அரசு கொண்டு வந்த "வழக்கறிஞர்கள் பாதுகாப்பு சட்ட மசோதா 2021 நிறைவேற்றிக் கோரியும் தமிழை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக அறிவிக்க கோரியும் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என்ற பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயர் மாற்றம் செய்யவும.



இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் ஊக்கத்தொகையாக 5000 வழங்க கோரியும்.. உச்சநீதிமன்றம் கிளையை தமிழகத்தில் உருவாக்க வேண்டியும்...வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் குடும்பங்களின் நலன்காக்க வழக்கறிஞர்கள் நலம் வாரியம் தமிழகத்தில் கொண்டு வர வேண்டும். என்று மத்திய சட்டத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டது அத்துடன் மூன்று சட்டங்கள் அடங்கிய மூத்தவழக்கறிஞர் டாக்டர் விஜயராஜ் தொகுத்த சட்ட நூலை மாண்புமிகு மத்திய அமைச்சரிடம் வழங்கப்பட்டது சட்ட நூலை பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார் சட்ட மசோதாவை உடனடியாக நிறைவேற்ற பரிசீலினை செய்வோம் உறுதி அளித்தார்.. வழக்கறிஞர் காசிபுதிய ராஜா நிறுவனர்

தினகனி



# டெல்டா பகுதியில் பயிர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுவதற்கு தி.மு.க. அரசே காரணம்:அண்ணாமலை





சென்னை, நவ.30

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,


ஆண்டுதோறும் பருவமழைக் காலத்தில், டெல்டா பகுதியில், சம்பா பயிர்கள், மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுவது தொடர்கதை ஆகியிருக்கிறது. பாசனக் கால்வாய்களைத் தூர்வார வேண்டும் என்று விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் கோரிக்கை விடுத்தும், திமுக அரசு அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்ததன் விளைவு, இந்த ஆண்டும் டெல்டா பகுதி சம்பா பயிர்கள் சுமார் 2,000 ஏக்கர் அளவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று, டெல்டா பகுதியில் நடைபெறும் விவசாயம்தான். ஆனால் அதனைக் குறித்துச் சிறிதும் கவலை இல்லாமல், சிலை வைப்பது போன்ற வீண் செலவுகளை மட்டுமே திமுக அரசு செய்து வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு, பாரதப் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு வழங்கும் இழப்பீட்டை, தாங்கள் கொடுப்பது போல விளம்பரம் செய்வதோடு தங்கள் பணி முடிவடைந்து விட்டதாகக் கருதுகிறார் முதல் அமைச்சர் ஸ்டாலின். பாசனக் கால்வாய்களைத் தூர்வாராததால், ஆண்டுதோறும் விவசாயிகள் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகி வருவது குறித்து அவருக்கு எந்தக் கவலையும் இல்லை.

உடனடியாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ.40,000 வீதம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றும், தமிழகம் முழுவதும் உள்ள பாசனக் கால்வாய்களை, முழுமையாகத் தூர்வாரும் பணிகளைப், போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புயல் எச்சரிக்கை: மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் அமைச்சர் ஆய்வு



சென்னை, நவ.30

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று பெஞ்சல் புயலாக வலுப்பெற்றுள்ள நிலையில், தமிழகம் மற்றும் புதுவையில் பரவலாக மழை பெய்து வருகிறது. மேலும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது .

இந்த நிலையில், வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையைதொடர்ந்து , மேற்கொள்ளப்பட்டு வரும்பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் இன்று அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். ஆய்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வ. மோகனச்சந்திரன்,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மழைக்காலங்களில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் மின்வாரியம் அறிவிப்பு



சென்னை, நவ.30

மழைக்காலங்களில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

★ ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின்சார சாதனங்களை இயக்க முயற்சிக்க வேண்டாம். வீட்டில்மின்சுவிட்சுகைள 'ஆன்' செய்யும் போது கவனத்துடன் இயக்கவும்.

★வீட்டின் உள்புற சுவர் ஈரமாக இருந்தால் மின்சார சுவிட்சுகள் எதையும் இயக்கக் கூடாது. வீடுகள் மற்றும் கட்டடங்களில் உள்ள ஈரப்பதமான சுவர்களில் கை வைப்பதை தவிர்க்க வேண்டும்.

★நீரில் நனைந்த பேன், லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்க வேண்டாம். மின்சார மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பகுதி ஈரமாக இருந்தால் உபேயாகிக்கக் கூடாது.

★வீட்டில் மின்சாரம் இல்லையென்றால் அருகில் இருந்து தாங்களாகவே ஒயர் மூலம் மின்சாரம் எடுக்க வேண்டாம்.

★மின் கம்பிகள் அறுந்து கிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், பில்லர்பாக்ஸ் (PillarBox)மற்றும்டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

★ சாலைகளிலும், தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின் சாதனங்களுக்கருகே தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் நடப்பேதா, ஓடுவேதா, விளையாடுவேதா மற்றும் வாகனத்தில் செல்வேதா தவிர்க்கப்பட வேண்டும். தாழ்வாக தொங்கிக் கொண்டிருக்கும் மின்சார ஒயர்கள் அருகில் செல்வைதயும், தொடுவதையும் தவிர்க்க வேண்டும்.

★மின்சார கம்பத்திலோ அல்லதுஅதற்காகபோடப்பட்டுள்ள ஸ்டே வயரின் (stay wire) மீதோ கொடி கயிறு கட்டி துணி காய வைக்க வேண்டாம். மின் கம்பத்திலோ அல்லது அவற்றை தாங்கும் கம்பங்களிலோ கால்நடைகளை கட்டி வைக்க வேண்டாம்.

★மின் சேவைகள் மின் கம்பி அறுந்து தொங்கிக் கொண்டிருந்தாலோ, மின் கம்பங்கள் உடைந்திருந்தாலோ,சாய்ந்திருந்தாலோ மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு உடனடியாக 24 மணி நேரமும் செயல்படும் மாநில மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்மா உணவகத்தின் மேற்கூரை பெயர்ந்து விழுந்து பெண் ஊழியர் காயம்: டி.டி.வி.தினகரன் கண்டனம்



சென்னை, நவ.30

ஆரோக்கியமான முறையில் அம்மா உணவகங்கள்தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர்டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை பல்லாவரம் அடுத்த பம்மல் அருகே இயங்கி வரும் அம்மா உணவகத்தின்மேற்கூரை பெயர்ந்து விழுந்ததில் அங்குஉணவுதயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பெண் ஊழியர் ஒருவர் காயமடைந்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏழை, எளிய மக்களின் பசியைப் போக்கும் வகையிலும், மலிவு விலையில் தரமான உணவு வழங்கும் நோக்கத்திலும் முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவால் தொடங்கி வைக்கப்பட்ட அம்மா உணவகங்களை முறையாக பராமரிக்கத் தவறிய தி.மு.க. அரசின் அரசியல் காழ்ப்புணர்ச்சி கடும் கண்டனத்திற்குரியது.

அம்மா உணவகங்களை மேம்படுத்த கடந்த ஜூலை மாதம் ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 21 கோடி ரூபாயில் அம்மா உணவகங்களின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தவோ, உணவின் தரத்தை மேம்படுத்தவோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதகாரணத்தினால் பல்வேறு பகுதிகளில் அம்மா உணவகங்கள் மூடப்பட்டு வருவதாகவும் புகார் எழுந்துள்ளது.

எனவே, லட்சக்கணக்கான ஏழை, எளிய மக்களின் பசியை போக்கும் மையங்களாக செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களை முடக்கும் நடவடிக்கைகளை கைவிட்டு, போதுமான நிதியை ஒதுக்கி ஆரோக்கியமான முறையில் அம்மா உணவகங்கள்தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்டம், கூடலூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் இயங்கி வரும் கல்லூரி மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி



ஊட்டி, நவ.30

நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மாணவர் மற்றும் மாணவியர்கள் விடுதிகளில் மாணாக்கர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம் மற்றும் உணவுப் பொருட்களின் இருப்புகள் குறித்தும், அடிப்படை மற்றும் கழிப்பிட வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அங்குள்ள மாணவர் மற்றும் மாணவியர்களிடம் தனித்தனியாக கலந்துரையாடி, அவர்களுக்கு போர்வைகளை வழங்கி, அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் கல்லூரி மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி நேரிடையாக பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்போது மாணவர்கள் மற்றும் மாணவியர்களின் கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதலாக சில பாடப்பிரிவுகள் விரைவில் துவக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் கல்லூரியில் மாணாக்கர்களின் சேர்க்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், ரூ.14.65 இலட்சம் மதிப்பில் கூடலூர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் விரைவில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், முன்னாள் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி, நகராட்சித்தலைவர்கள் சிவகாமி (நெல்லியாளம்), பரிமளா (கூடலூர்), கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் கீர்த்தனா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ் கண்ணன், ஓவேலி பேரூராட்சித்தலைவர் சித்ராதேவி ஆகியோர் உடனிருந்தனர்.

# கரூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கரூர், நவ.30

கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பதுடன் விவசாயிகளின் குறைகளை அனைத்துத் துறை அலுவலர்கள் அறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் இதுபோன்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகின்றன.

கரூர் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த 10 முதல் 15 நாட்களுக்குள் தொடர்புடைய விவசாயிகளுக்கு அஞ்சல் மூலம் பதில் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் போதுமான அளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், யூரியா 1053 மெட்ரிக் டன்னும், டிஏபி 162 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 921 மெட்ரிக் டன்னும், என்.பி.கே. 1317 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 3,453 மெ.டன் இரசாயன உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் நெற்பயிர் சாகுபடிக்காக 50, 1009, 53, 54, 13, 55 உள்ளிட்ட ஆகிய நெல் ரகங்கள் 26.440 மெட்ரிக் டன்னும், சிறுதானியங்கள், கம்பு கோ 10, சோளம் 32, 12, ஆகியவை 46.500 மெட்ரிக் டன்னும், பயிறு வகை பயிர்கள், உளுந்து 8 -. 10, கொள்ளு பையூர் 2, ஆகியவை 13.00 மெட்ரிக் டன்னும் மற்றும் எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை தரணி கோ 6, கோ7, டி.எம்.வி 14, எள் டிஎம்.வி 7 ஆகியவை 6.558 மெட்ரிக் டன்னும் இருப்பில் உள்ளது.

கரூர் மாவட்டத்தின் இயல்பான ஆண்டு மழை அளவு 652.20 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டு நவம்பர் 2024 வரை 590.27 மி.மீ மழை பெய்துள்ளது. அதேபோன்று, நவம்பர் மாதம் முடிய 16,675 ஹெக்டர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி உரிய முறையில் விவசாயப் பணிகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பாக வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு ஆட்கொல்லி நோய் தடுப்பூசி 3.24 இலட்சம் டோஸ்கள் பெறப்பட்டு, முகாம் கடந்த 11.11.2024 முதல் 10.12.2024 வரை நடைபெறுகிறது. இதில் 28.11.2024 வரை 2,86,700 வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு செலுத்தப்பட்டுள்ளதென மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்கள்.

இன்றைய தினம், விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோதிக்கைகள் அடங்கிய 104 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ம.கண்ணன், கு.விமல்ராஜ் (நிலமெடுப்பு), குளித்தலை சார் ஆட்சியர் தி.சுவாதிரீ, வேளாண்மை இணை இயக்குநர் சிவானந்தம், கூட்டுறவு சங்ககளின் இணைப்பதிவாளர் கந்தராஜா, கால்நடை பராமரிப்புத்துறையின் இணை இயக்குநர் சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வி. உமா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், உதவி ஆணையர் கலால் கருணாகரன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது பட்டமளிப்பு விழா




கோவை, நவ.30

டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது பட்டமளிப்பு விழா, டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக, டாக்டர். என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் ஓ.டி.புவனேஸ்வரன், அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

டாக்டர் என்.ஜி.பி.ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர், டாக்டர் நல்ல.ஜி.பழனிசாமி தலைமை வகித்தார். புதுடில்லியைச் சேர்ந்த பெருமதிப்பிற்குரிய அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் உறுப்புச் செயலரும் இந்நிகழ்வின் தலைமை விருந்தினருமான பேராசிரியர். இராஜீவ்குமார் இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழாவின் சிறப்புரையை வழங்கினார்கள்.

நடப்புக் கல்வியாண்டுக்கான ஆண்டறிக்கையை, என்ஜிபி தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் டாக்டர். எஸ்.யு.பிரபா அவர்கள் சமர்ப்பித்தார். டாக்டர் என்.ஜி.பி. கல்வி குழுமங்களின் கல்லூரிச் செயலாளரும் அறங்காவலருமான டாக்டர் தவமணி. டி.பழனிசாமி அவர்கள் பட்டமளிப்பு விழாவின் வாழ்த்துரையை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

டாக்டர்.என்.ஜி.பி. கல்வி குழுமங்களின் அறங்காவலர்களில் ஒருவரான டாக்டர் அருண் என். பழனிசாமி அவர்கள் பட்டம் பெற்ற மாணவ, மாணவியர்களை வாழ்த்திப் பேசினார்கள்.



தஞ்சாவூர் மாவட்டம் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டார்.

# நிலக்கோட்டை வட்டம், கோட்டூர் ஊராட்சி சமத்துவபுரத்தில் நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி



திண்டுக்கல், நவ.30

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கோட்டூர் ஊராட்சி சமத்துவபுரத்தில் நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணிகளை மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, ஆய்வு மேற்கொண்டார்

இந்த ஆய்வின்போது, மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்ததாவது:

பசுமை தமிழ்நாடு இயக்கம் எனும் செயல்பாட்டின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவினை அதிகரிக்கும் செயல்பாடுகளை மேற்கொள்ள 2024-25 முதல் 2026-27 வரையிலான ஆண்டுகளில் அதிகளவிலான மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில் 7 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 8 ஊராட்சிகளில் வட்டார அளவிலான குழு தேர்வு செய்யப்பட்ட பசுமை தமிழ்நாடு இயக்கம் நாற்றாங்கால் பண்ணையில் தலா 10,000 மரக்கன்றுகள் வீதம் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.1,00,80,000/ மொத்தம் 80,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய வனத்துறையுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை கள் இணைந்து இச்செயல்பாட்டினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கோட்டூர் ஊராட்சி சமத்துவபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் வனத்துறை மூலம் மேற்கொள்ள ரூ.12,60,000/ மதிப்பீட்டில் 10,000 மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2022-23 ஆம் ஆண்டில். கோட்டூர் ஊராட்சி சமத்துவபுரத்தில் ஏற்கனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கியது போக 4,800 மரக்கன்றுகள் இருப்பில் உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 2,00,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்து நடவு செய்ய இலக்கு நிர்ணக்கப்பட்டுள்ளது, முதற்கட்டமாக 80,000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்துள்ளார். இந்த ஆய்வின் போது, நிலக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) தி.பஞ்சவர்ணம் உட்பட பலர் உள்ளனர்.

# குடியாத்தம் அத்தி செவிலியர் கல்லூரியின் 5ஆம் ஆண்டு வகுப்புகள் துவக்கம் நறுவீ மருத்துவமனை தலைவர் ஜி.வி.சம்பத் சான்றிதழ்கள் வழங்கினார்



வேலூர், நவ30

வேலூர் மாவட்டம் குடியாத்தம் காக்கா தோப்பில் அமைந்துள்ள அத்தி செவிலியர் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு செவிலியர் பிஎஸ்சி நர்சிங் மற்றும் நான்காம் ஆண்டு ஏ என் எம் துனை செவிலியர் வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது

அத்தி கல்வி குடும்பத்தின் நிறுவனர் மற்றும் தலைவரும் அத்தி மருத்துவமனையின் தலைமை மருத்துவருமான சிறுநீரகவியல் நிபுணர் மரு. சௌந்தரராஜன் விழாவிற்கு தலைமை தாங்கினார் அத்தி மருத்துவமனையின் கிளை தலைமை மருத்துவர் மரு. ஆ கென்னடி முன்னிலை வகித்தார் அத்தி செவிலியர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பால்ராஜ் சீனிதுரை அனைவரையும் வரவேற்றார் சிறப்பு அழைப்பாளராக நறுவீ மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் தலைவருமான முனைவர் ஜி.வி. சம்பத் விழாவில் பங்கேற்று குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் கேடயங்களை வழங்கினார் அப்போது அவர் பேசுகையில் ,மருத்துவத் துறையில் மருத்துவர்களின் பணிக்கு இணையானது செவிலியர்களின் பணியாகும் மேற்குலக நாடுகளில் செவிலியர்கள் பணியும் திறனும் அங்குள்ள இளநிலை மருத்துவர்களின் பணிக்கு நிகரானது ஆகும் அது போன்று இங்குள்ள செவிலியர்களும் தங்களது சுய திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் செவிலியர் சேவை போல் எந்த துறையினராலும் சேவை செய்ய முடியாது ஏனென்றால் மற்ற பணி செய்பவர்கள் ஊதியத்திற்காக பணி செய்பவர்கள் ஆனால் அன்பு மற்றும் சேவை மனப்பான்மையோடு செய்வது செவிலியர் பணி ஆகும் என்று அவர்பெருமையுடன் வாழ்த்து தெரிவித்து பேசினார்

# திருநெல்வேலி மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம்: மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நெல்லை, நவ.30

திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தும் பொருட்டு, உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டம் முகாம் இராதாபுரம், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, மானூர், சேரன்மகாதேவி, திசையன்விளை மற்றும் பாளையங்கோட்டை வட்டத்தில் நடைபெற்றது. இன்றையதினம், உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தில் திருநெல்வேலி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்று, ஒவ்வொரு திட்டங்கள் குறித்தும், நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஆய்வுமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, நெடுஞ் சாலைத் துறையின் சார்பில் திருநெல்வேலி புறவழிச்சாலை ரூ.51 கோடி மதிப்பில் உடையார்பட்டி முதல் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் வரை நான்கு வழிச்சாலையாக சாலையினை அகலப்படுத்தி தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதனைத்தொடர்ந்து, திருநெல்வேலி தெற்கு புறவழிச்சாலை உடையார்பட்டி மணி மூர்த்தீஸ்வரம் சீவலப்பேரி பிரிவு சாலையில் ரவுண்டானா அமைத்து சாலை விரிவாக்கம் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். தொடர்ந்து, திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் ரூ.660 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பழையபேட்டை சுந்தர விநாயகர் கோவில் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதையும், ரூ.14.67 கோடி மதிப்பில் பழையபேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட கனரக வாகன முனையம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பாகவும், பம்பன்குளத்தில் நடைபாதை மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் இன்றையதினம் பேட்டை, பாலாமடை, திருப்பணிகரிசல்குளம், கங்கைகொண்டான், கொண்டாநகரம், மேலக்கல்லூர், சங்கர் நகர், நாரணம்மாள்புரம், சங்கன்திரடு, சுத்தமல்லி, வெள்ளாளங்குளம், சீதபற்பநல்லூர், அலங்காரபேரி, இராமயன்பட்டி, இராஜவல்லிபுரம், தென்பத்து, நரசிங்கநல்லூர், கோடகல்லூர், துலுக்கர்குளம், பழவூர், குப்பக்குறிச்சி, கருங்காடு, புதூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அனைத்துத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

திருநெல்வேலி மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில், மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம் தொடர்பான அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் இன்றைய ஆய்வுகள் குறித்தும், பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

# ஆலங்குளத்தில் ஒன்றிய நகர திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்த நாள் விழா



ஆலங்குளம் நவ 30

ஆலங்குளம் பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையம் முன்பு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் நல மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் 47வது பிறந்த நாள் விழா ஒன்றிய நகரதிமுக சார்பில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம் நடைப் பெற்றது.

ஒன்றிய செயலாளர் செல்லத்துரை, .ஆலங்குளம் நகர செயலாளர் எஸ்பி டி நெல்சன் ஆகியோர் தலைமையில் நடந்தது.

ஆலங்குளம் நகர பொருளாளர் சுதந்திரராஜன் வரவேற்றார்.

பகுத்தறிவு பாசறை ஒன்றிய கவுன்சிலர் ஆலடி எழில்வாணன் முன்னிலை வகித்தார்.

ஆலங்குளம் யூனியன் சேர்மன் எம் திவ்யா மணிகண்டன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொது மக்களுக்கும் மற்றும் பேருந்துகளில் பயணிகளுக்கு இனிப்புகளை வழங்கி கட்சித் தொண்டர்கள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என கோசங்களை எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் பொறியாளர் அணி அமைப்பாளர் மணிகண்டன், ஜாகிர் உசேன், பகுத்தறிவு பாசறை ராசையா, மனுவேல், மாவட்ட பிரதிநிதி வாசு, மார்க்கெட் ஜெயபாலன், வார்டு செயலாளர் சாலமோன்ராஜா, சாமுவேல்ராஜா. சிறுபான்மை அணியினர் முகமது மைதீன் ,ஜாகிர் கான். மகளிர் அணி துணி அமைப்பாளர் சரஸ்வதி பாஸ்கரன், அன்னக்கிளி பொண்ணு துரை, கோபி, ஆட்டோ ஜோசப், அல்போன்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆண்டிபட்டியில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் பாலாலயம் நடைபெற்றது



ஆண்டிபட்டி , நவ.30

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி கடைவீதியில் பழமை வாய்ந்த புராதன சிறப்புமிக்க மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் பாலாலய நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது .

இந்து சமய ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெறுவது வழக்கம் . மீனாட்சி அம்மன் கோவிலில் கடந்த 10 .7 .2011 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று ,தற்போது 13 ஆண்டுகள் நிறைவு பெற்றதால், மீண்டும் ஆகம விதிகளின்படி கும்பாபிஷேகம் நடத்த இந்து சமய அறநிலைத்துறையின்ரும், பொதுமக்களும் முடிவு செய்து, அதற்கு முன்னேற்பாடாக ஆகம விதிகளின்படி நேற்று கோவில் வளாகத்தில் பாலாலய நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை முன்னிட்டு கோவில் வளாகத்தில் யாகசாலை பீடத்தில் தீர்த்த குடங்கள் வைத்து பூஜை செய்யப்பட்டு, யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. மேலும் பலகைகளில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர், மற்றும் பரிவார தெய்வங்கள் மற்றும் கோபுரப் படங்கள் வரையப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டது .பூஜிக்கப்பட்ட குடங்களில் தெய்வ சக்தி நிலை நிறுத்தப்பட்டு அபிசேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மகா தீபாராதனை காட்டப்பட்டது. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ,ஆண்டிபட்டி யூனியன் சேர்மன் லோகிராஜன், பேரூராட்சி சேர்மன் சந்திரகலா மற்றும் நிர்வாகிகளுக்கு மரியாதை அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் செயல் அலுவலர் ஹரிஷ் குமார் மற்றும் ஆய்வாளர் தனலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதனை அடுத்து கோவில் பகுதிகள், கோபுர கலசங்கள் புனரமைப்பு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறும் என்று இந்து சமய அறநிலைத்துறையினர் தெரிவித்தனர்.


# மலைப்பாதைகளில் வாகன விபத்து ஏற்படாமல் தவிர்க்க சாலை ஓரங்களில் வளர்ந்த செடி கொடிகளை அகற்றும் பணிகள்



ஒட்டன்சத்திரம், நவ.30

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் நெடுஞ் சாலைத் துறையினர் பாச்சலூர் வரை செல்லும் மலைப்பாதைகளில் வாகன விபத்து ஏற்படாமல் தவிர்க்க சாலை ஓரங்களில் வளர்ந்த செடி கொடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் வளைவுப் பகுதிகளில் செடி கொடிகள் அதிகமாக வளர்ந்துள்ளதை கண்டு பழனி கோட்ட பொறியாளர் குமணன் உத்தரவின்படி ஒட்டன்சத்திரம் உட்கோட்ட பொறியாளர் விஜய குமார், மற்றும் உதவி பொறியாளர் இளவரசன், சாலை ஆய்வாளர் ஆண்டவன், மற்றும் சாலை பணியாளர்கள் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள வடகாடு, பால்கடை, பெத்தேல்புறம், புலிக்குத்திகாடு, சுரக்காபட்டி, கடைசிகாடு பாச்சலூர் வரை செல்லக்கூடிய மலை வளைவு பகுதிகளில் உள்ள சாலை ஓரங்களில் வாகனங்களுக்கு விபத்து ஏற்படும் வகையில் சாலை ஓரங்களில் செடிகள் அதிகமாக வளர்ந்து இருப்பதால் விபத்தை தவிர்க்கும் விதமாக துரித நடவடிக்கை மேற்கொண்டு செடி கொடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர் இதனால் அப்பகுதி செல்லும் வாகன ஓட்டிகளும் மலைவாழ் மக்களும் நெடுஞ்சாலை துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

# பொது நிவாரண நிதியிலிருந்து 51 விசைப்படகுகள் மற்றும் 7 நாட்டுப்படகுகளுக்கான மீனவர்களுக்கு நிவாரண நிதி



இராமநாதபுரம் , நவ.30

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மீனவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவிக்கான காசோலையினை மீனவர்களுக்கு வழங்கி தெரிவிக்கையில்,

இலங்கை கடற்படையினரால் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை கைப்பற்றப்பட்டு அங்கு நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 51 விசைப்படகுகள் மற்றும் 7 நாட்டுப் படகுகளைச் சேர்ந்த மீனவர் குடும்பங்களின் வறுமையை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து விசைப்படகிற்கு தலா ரூ.6.00,000 வீதமும், நாட்டுப்படகுக்கு தலா ரூ.2,00,000 வீதமும் மொத்தம் 58 படகுகளுக்கு ரூ.3 கோடியே 20 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2024 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட படகுகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பாம்பன், மண்டபம், இராமேஸ்வரம் உள்ளிட்ட கடற்கரைப் பகுதியில் புதிதாக தூண்டில் வலை அமைக்கவும், மீன்பிடி இறங்குதள பகுதியில் கடல் ஆழப்படுத்தும் பணியையும் மீனவர்களின் கோரிக்கைக்கேற்ப ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடந்த வாரம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர் மீன்பிடிக்கும் பொழுது கடலில் காணாமல் போனதையொட்டி தேடப்பட்டு வந்தன. இதுவரை மீனவர் கிடைக்காத நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய நிவாரணம் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுபோல் அவ்வப்போது மீனவர் குடும்பங்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் மீன்வளத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது என மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

# வாடிப்பட்டி அருகே அரசு பள்ளி வேளாண்மை மாணவர்களுக்கு உள்ளுறை அகப் பயிற்சி முகாம்



அலங்காநல்லூர், நவ. 30

மதுரை மாவட்டம் பாலமேடு அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வேளாண்மை பிரிவு மாணவ மாணவிகளுக்கு மண்புழுஉரம் தயாரிப்பு பற்றிய உள்ளுறை அகப் பயிற்சி முகாம் வாடிப்பட்டி அருகே பாண்டியராஜபுரம் ராசி மற்றும் எஸ்.எஸ். மண்புழு உரப்பண்ணைகளில் 10 நாட்கள் நடந்தது. இந்த பயிற்சி முகாமிற்கு தலைமை ஆசிரியர் திருநாவுக்கரசு, தலைமை தாங்கி தொடக்கிவைத்தார்.

வேளாண்மை ஆசிரியர் முருகேஸ்வரி, முன்னிலை வைத்தார். தமிழ் ஆசிரியர் ஜெய்கணேஷ், வரவேற்றார். இந்த முகாமில் மண்புழு உர தொழிற்சாலை உரிமையாளர் சரவணன், வேளாண்மை ஆசிரியர் லதா, ஆகியோர் பயிற்சியளித்தனர். இதில் உரப்படுக்கை தயாரித்தல், செரிவூட்டப்பட்ட மண் கலவை தயாரித்தல், உரம் சேகரித்தல், ஆட்டு உரம் தயாரித்தல், உரங்கள் சலித்தல், பிரித்தெடுத்தல் ,எடை போடுதல், சிப்பமிடுதல், பஞ்சகாவியம் தயாரித்தல், ஹியூமிக் அமிலம் தயாரித்தல் உள்ளிட்டவை பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. முடிவில் வேளாண்மை பயிற்றுனர் நந்தினி நன்றி கூறினார்.

தினகனி



# பாடாலூரில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பால் பவுடர் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

பெரம்பலூர், நவ.30

பெரம்பலூர் மாவட்டம் பாடாலூர் திருவிளக்குறிச்சியில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 60 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் கட்டுமான பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து செய்தியாளர்கள் பயணத்தில் மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் செய்தியாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.



மாவட்ட கலெக்டர் செய்தியாளர்கள் பயணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி, பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் நாளொன்றுக்கு 6 லட்சம் லிட்டர் பால் கையாளும் வகையில் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் ரூ.150 மதிப்பீட்டில் நிறுவப்படும் என 13.04.2024 அன்று நடைபெற்ற பால்வளம் தொடர்பான மானிய கோரிக்கையில் பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொழிற்சாலை அமைப்பதற்கான அரசாணை 03.03.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. திருச்சி, அரியலூர், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து நாளொன்றுக்கு 10,32,533 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 4,39,684 பால் விற்பனை செய்யப்படுகிறது.

சுமார் 6 லட்சம் லிட்டர் உபரி பாலாக உள்ளது. இப்பாலை பயன்படுத்தும் வகையிலும், பால் உற்பத்தியாளர்கள் நலனை கருத்தில் கொண்டும் உபரி பாலில் இருந்து பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் முழுசத்து பால் பவுடர், கொழுப்பு சத்து நீக்கப்பட்ட பால் பவுடர், டெய்ரி ஒயிட்னர் மற்றும் வெண்ணெய் தயாரிக்கும் வசதிகளுடன் தமிழகத்தில் மிகப்பெரிய பால் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக அமையும். இதன் வாயிலாக பெரம்பலூர் மாவட்டம் உட்பட 11 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற உள்ளனர் என செய்தியாளர் பயணத்தின் போது தெரிவித்தார்.

# தர்மபுரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் வாரச் சந்தை கட்டுமான பணிகள்: மாவட்ட கலெக்டர் கி.சாந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு

தர்மபுரி, நவ.30

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், எர்ரனஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மதிய உணவு திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்தும், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 கீழ் ரூ.2.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வாரச் சந்தை கட்டுமான பணிகளையும் மாவட்ட கலெக்டர் கி.சாந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மேலும், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், பிக்கிலி ஊராட்சி, பெரியூர் கிராமத்தில் ()திட்டத்தின் கீழ் ரூ. 5.73 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 9 புதிய வீடுகளின் கட்டுமான பணிகளையும், பிக்கிலி ஊராட்சி, மேட்டு கொட்டாயில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17.46 இலட்சம் மதிப்பீட்டில் புதியகுளம் அமைக்கும் பணிகளையும், பிக்கிலி ஊராட்சி, கொல்லப்பட்டி கிராமத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வீடு கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகளையும், பிக்கிலி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.8.83 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பட்டு வளர்ச்சி குடில் கட்டுமான பணிகளையும், சீமுத்து கொட்டாய் கிராமத்தில் பழங்குடியினர் / இருளர் வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 17 வீடுகள் கட்டுமான பணிகளையும், பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பு கிராமத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டில் பிக்கிலி சாலை முதல் பனங்காடு வரை நடைபெற்று வரும் சாலை பணிகளையும், பிக்கிலி ஊராட்சியில் கிராமப்புற வீடுகள் பழுது நீக்கம் செய்தல் திட்டத்தின் கீழ் ரூ.1.45 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளையும், புதுக்கரம்பு கிராமத்தில் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 7.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையம் கட்டுமான பணிகள் என மொத்தம் ரூ.125.17 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் கி.சாந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை தரமாகவும், குறிப்பிட்ட கால அளவிற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இதனைத்தொடர்ந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் கி.சாந்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ்குமார், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுகளின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுருளிநாதன், ஷகிலா, வட்டாட்சியர் லட்சுமி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# அரியலூரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தொமுசவினர் சங்க கொடியேற்றி,ஆதரவற்ற முதியவர் களுக்கு அன்னதானம்

அரியலூர் நவ.30

அரியலூரில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட திமுக செயலாளாளரும், போக்குவரத்து துறை அமைச்சருமான சா சி சிவசங்கர் வழிகாட்டுதலின்படி அரசு போக்குவரத்துக் கழகம் தொழிலாளர் முன்னேற்ற சங்க அரியலூர் கிளை நிர்வாகிகள் சார்பில், கல்லங்குறிச்சி சாலையிலுள்ள பணிமனை முன்பு, தொ.மு.ச கொடியேற்றும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அரசு போக்குவரத்துக் கழகத்தின் அரியலூர் கிளை செயலாளர் பிவி அன்பழகன் தலைமை வகித்து, தொழிற்சங்க கொடியினை ஏற்றி வைத்து பொதுமக்கள் தொமுச நிர்வாகிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.முன்னதாக இராஜாஜி நகரிலுள்ள சாந்தம் முதியோர் இல்லத்தில் வசிக்கும் ஆதரவற்ற முதியவர்கள் 30க்கும் மேற்பட்டோருக்கு, தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழக அரியலூர் கிளை தொமுச சார்பில் காலை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியினை அரியலூர் நகர திமுக செயலாளர் தலைமையேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசு போக்குவரத்து கழக அரியலூர் கிளை தொமுச தலைவர் எம். கனகராஜ், பொருளாளர் எம். பழனிச்சாமி, துணைத் தலைவர் எம் சிவக்குமார், துணைச் செயலாளர் எம்.சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், ரமேஷ்குமார், தன்ராஜ், ஆசைத்தம்பி, வில்வேந்திரன், நடராஜன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்



# தாராபுரம் நகர ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளராக சமூக சேவகர் நியமிப்பு



தாராபுரம், நவ.30

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் பல ஆண்டுகளாக திமுகவில் அங்கம் வகித்து வருபவர் சமூக சேவகர் கே. வி சிவசங்கர். இவரது சேவையை பாராட்டி தற்போது திமுக தலைமை கழகம் தாராபுரம் நகர ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளராக பொறுப்பு கொடுத்து கௌரவித்துள்ளது. இதற்காக அவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பத்மநாபன், மற்றும் மாநில மாவட்ட நகர திமுக நிர்வாகிகள் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

# கசிந்த ஆபாச காட்சி மவுனம் கலைத்த மலையாள நடிகை



பாயல் கபாடியாவின் இயக்கத்தில், கோலிவுட் இளம் நாயகன் ஹிருது ஹாரூன் நடிப்பில் உருவான படம் "ஆல் வி இமேஜின் அஸ் லைட்". இப்படத்தில் கனி குஸ்ருதி, திவ்ய பிரபா, சாயா கடம், ஹிருது ஹாரூன், அஸீஸ் நெடுமங்காட் மற்றும் டிண்டுமால் ஜோசப் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

30 ஆண்டுகளுக்குப் பிறகு கேன்ஸ் திரைப்பட விழாவில் போட்டியிட்ட முதல்இந்தியத்திரைப்படம்என்றசாதனையைபடைத்ததுமட்டுமில்லாமல், கிராண்ட் பிரிக்ஸ் என்ற பிரிவில் விருதும் வென்றது.

கடந்த 22ஆம் தேதி மலையாளம், இந்தி, மராத்தி ஆகிய மொழிகளில் திரையரங்குகளில்வெளியானஇப்படம்நல்லவரவேற்பைபெற்றுவருகிறது. சமீபத்தில், இப்படத்தில் நடிகை திவ்ய பிரபா நடித்த ஆபாச காட்சி இணையத்தில் கசிந்தது. இந்நிலையில், அதற்கு நடிகை திவ்ய பிரபா மவுனம் கலைத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'ஒரு நடிகையாக, எனக்கு பிடித்த கதைகளில் நடிக்கிறேன். புகழுக்காக நான் ஆபாச காட்சியில் நடித்ததாக சிலர் விமர்சனம் செய்கிறார்கள். நான் பல விருதுகளை வெற்றிருக்கிறேன். அதோடு விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட படங்களிலும் நடித்திருக்கிறேன். அதனால் ஆபாசமாக நடித்துதான் புகழ் பெற வேண்டும் என்ற நிலைமை எனக்கு இல்லை. கசிந்த வீடியோவை பகிர்ந்தவர்கள் மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர்தான்' என்றார்.

# புஷ்பா 2 புரமோஷன்களில் பகத் பாசில் கலந்துகொள்ளாதது குறித்து பேசிய அல்லு அர்ஜூன்



கடந்த 2021ம் ஆண்டு அல்லு அர்ஜுன் நடிப்பில் சுகுமார் இயக்கத்தில் வெளியான படம் 'புஷ்பா தி ரைஸ்'. இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகியுள்ளது. இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

இப்படம் அடுத்த மாதம் 5ந் தேதி உலகளவில் பிரம்மாண்டமாக வெளியாக உள்ளது. தற்போது, இப்படத்தின் புரமோஷன் பணிக்காக படக்குழுவினர் பல இடங்களுக்கு சென்று வருகின்றனர். அந்தவகையில் சமீபத்தில் கேரளாவின் கொச்சியில், படத்தின் புரமோஷன் பணி நடைபெற்றது.

இதில் பகத் பாசில் கலந்துகொள்ளாதநிலையில், அவரை மிகவும் மிஸ் பண்ணுவதாக அல்லு அர்ஜுன் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'நான் இதுவரை பணியாற்றிய படங்களில் என்னுடன் நடித்த நடிகர்களில் மிகவும் சிறந்த மலையாள நடிகர் யார் என்றால் அது பகத் பாசில்தான். அவரை இங்கு மிகவும் மிஸ் பண்ணுகிறேன். அவருடன் ஒன்றாக நிற்க விரும்பினேன்' என்றார்.

# 'பிரபாசைபோல மகன் வேண்டும்' பழம்பெரும் முன்னணி நடிகை



பழம்பெரும் முன்னணி நடிகையான ஜரீனா வஹாப், சமீபத்தில் ஜூனியர் என்.டி.ஆர் நடிப்பில் வெளியான தேவரா படத்தில் நடித்திருந்தார். இதனையடுத்து, தற்போது இவர் நடித்து வரும் படம் 'தி ராஜாசாப்'. மாருதி இயக்கத்தில் ஹாரர் காமெடி கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தில் பிரபாஸ் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

பீப்பிள் மீடியா பேக்டரி மற்றும் ஜிஎஸ்கே மீடியா ஆகிய தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து இந்த படத்தினை தயாரிக்கிறது. தமன் இசையமைக்கும் இப்படத்தில் ஜரீனா வஹாப், மாளவிகா மோகனன், நிதி அகர்வால், யோகி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் தேதி இப்படம் திரைக்கு வரவுள்ளது. இந்நிலையில், நேர்காணல் ஒன்றில் பேசிய ஜரீனா வஹாப், அடுத்த ஜென்மத்தில் தனக்கு பிரபாஸ்போல மகன் வேண்டும் என்று கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'பிரபாஸ் எல்லோரிடமும் ஒரே மாதிரிதான் நடந்து கொள்வார். எல்லோரையும் சமமாக நடத்துவார். அவரைப் போல் வேறு யாரும் இருக்க முடியாது. அடுத்த ஜென்மத்தில் எனக்கு இரண்டு மகன்கள் வேண்டும். ஒருவர் பிரபாஸைப் போலவும், மற்றொருவர் சூரஜ் (அவரது உண்மையான மகன்) போலவும்' என்றார்.

# இங்கிலாந்து வீரர் அடித்த பந்து.. பாய்ந்து கேட்ச் பிடித்த கிளென் பிலிப்ஸ் வைரல் வீடியோ



நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 319 ரன்கள் குவித்தது. கிளென் பிலிப்ஸ் 41 ரன்களுடனும், டிம் சவுதி 10 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இங்கிலாந்து தரப்பில் சோயப் பஷீர் 4 விக்கெட்டுகளும், கஸ் அட்கின்சன், பிரைடன் கார்ஸ் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து இரண்டாவது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் 348 ரன்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் வில்லியம்சன் 93 ரன்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் சோயப் பஷீர், பிரைடன் கார்ஸ் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து இன்றைய 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 319 ரன்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்து தரப்பில் ஹாரி புரூக் சதம் அடித்து அசத்தினார். இங்கிலாந்து இன்னும் 29 ரன்கள் பின்னிலையில் உள்ளது.

இங்கிலாந்து தரப்பில் ஹாரி புரூக் 132 ரன்னுடனும், பென் ஸ்டோக்ஸ் 37 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். நியூசிலாந்து தரப்பில் நாதன் ஸ்மித் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். நாளை 3ம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. இந்த போட்டியில் நியூசிலாந்து வீரர் கிளென் பிலிப்ஸ் பிடித்த கேட்ச் ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இங்கிலாந்தின் முதல் இன்னிங்சில் 53 ஓவரை டிம் சவுதி வீசினார். அந்த ஓவரின் 2வது பந்தில் போப் அடித்த பந்தை நியூசிலாந்து அணியின் சிறந்த பீல்டரான கிளென் பிலிப்ஸ் பாய்ந்து பிடித்தார்.

பீல்டர் என்றால் தென் ஆப்பிரிக்கா முன்னாள் வீரரான ஜாண்டி ரோட்ஸ் தான் நம் நினைவுக்கு வருவதுண்டு. அவரை போலவே அந்தரத்தில் கேட்ச் பிடித்து கிளென் பிலிப்ஸ் அசத்தி உள்ளார் என்றும் விட்டால் அவரையே மிஞ்சி விடுவார் என்றும் கிரிக்கெட் ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# சையத் முஷ்டாக் அலி; தமிழகத்திற்கு எதிராக டாஸ் வென்ற குஜராத் பேட்டிங் தேர்வு




17வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டி மும்பை, இந்தூர், ராஜ்கோட், ஐதராபாத் உள்பட பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நடப்பு சாம்பியன் பஞ்சாப், 3 முறை சாம்பியனான தமிழகம், பெங்கால், பரோடா உள்பட 38 அணிகள் பங்கேற்கின்றன. அவை 5 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் மற்றும் 2வது இடம் பெறும் ஒரு சிறந்த அணி என 6 அணிகள் நேரடியாக காலிறுதிக்கு தகுதி பெறும். 2வது இடம் பிடிக்கும் எஞ்சிய 4 அணிகள் தங்களுக்குள் 'நாக்அவுட்' சுற்றில் மோதி அதில் வெற்றி பெறும் 2 அணிகள் காலிறுதியை எட்டும்.

இந்த தொடரில் குரூப் பியில் இடம் பெற்றுள்ள தமிழகம் இதுவரை 3 ஆட்டங்களில் ஆடி 2 வெற்றி, 1 தோல்வி கண்டுள்ளது. இதையடுத்து இந்த தொடரின் 4வது கட்ட லீக் ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன. இதில் தமிழக அணி குஜராத்தை எதிர்கொள்கிறது. தொடர்ந்து இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.